பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 02 நாள்: 10.01.2018

# சென்னை மாவட்டத்தின் 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியலுக்கான துணைப் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்தின் 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியலுக்கான துணைப் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.01.2018) ரிப்பன் மாளிகையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி சென்னை மாவட்டத்தில் அடங்கியுள்ள (03/01/2018 வரை) 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள், 2018ஆம் ஆண்டிற்கான சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் தொடர்பாக வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த 03/10/2017 அன்று வெளியிடப்பட்டன.

01.01.2018 அன்று தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு, வாக்காளர் பட்டியல் பெயர்கள் சேர்த்தல், நீக்கம் செய்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் உள்ள பதிவுகளில் திருத்தம் மேற்கொள்ளுதல் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து உரிய படிவங்கள் 03/10/2017 முதல் 15/12/2017 முடிய பெறப்பட்டன. அவ்வாறு பெறப்பட்ட படிவங்கள் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் நேரடி ஆய்விற்கு பின்னர் சட்டமன்ற தொகுதியினைச் சார்ந்த வாக்காளர் பதிவு அலுவலர்களால் படிவங்கள் ஏற்பு அல்லது நிராகரிப்பு குறித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் 2018–ஆம் ஆண்டிற்கான துணைப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளன. அத்துணைப்பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியல் சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, உதவி ஆணையாளர் அலுவலகங்களிலும், வாக்குச்சாவடி மையங்களிலும் பொதுமக்கள் பார்வையிடலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் www.elections.tn.gov.in என்ற இணையதள முகவரியிலும் பார்த்து கொள்ளலாம்.

கடந்த 03.10.2017 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலின்படி சென்னை மாவட்டத்தினைச் சார்ந்த 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான மொத்த வாக்காளர்களது எண்ணிக்கை விவரம்.

| | | |
|---|---|---|
| 1. | ஆண்கள் | 18,76,652 |
| 2. | பெண்கள் | 19,24,366 |
| 3 | இதரர் | 901 |
| | மொத்தம் | 38,01,919 |

2017ம் ஆண்டு சிறப்பு சுருக்க முறைத்திருத்தம் தொடர்பாக 41,485 பெயர் சேர்த்தல் மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது. அதில் 879 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. ஏற்றுக்கெள்ளப்பட்ட மனுக்கள் 82,666. அதன் விவரம் கீழ்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | ஆண்கள் | 20277 |
| 2. | பெண்கள் | 20309 |
| 3 | இதரர் | 20 |
| | | ------ |
| | மொத்தம் | 40,606 |
| | | ------ |

வாக்காளர் பட்டியல்களில் பெயர் நீக்கம் செய்ய கோரி வரப்பெற்ற படிவம்–7ன் எண்ணிக்கை 2252 ஆகும். அவற்றில் வாக்காளர் பதிவு அலுவலர்களது விசாரணைக்கு பின்னர் வாக்காளர் பட்டியல்களிலிருந்து பெயர்கள் நீக்கம் செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 2155 ஆகும். மேலும் 3,10,235 பெயர்கள் தகுதியின்மை அடிப்படையில் தன்னிச்சையாக (SUO-MOTU) நீக்கம் செய்யப்பட்டன. அவ்வாறு வாக்காளர் பட்டியல்களிலிருந்து பெயர்கள் நீக்கம் செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை விவரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஆண்கள் | 1,56,792 |
| 2. | பெண்கள் | 1,55,501 |
| 3 | இதரர் | 97 |
| | மொத்தம் | 3,12,390 |

இன்று வெளியிடப்பட்ட இறுதி திருத்தப் பட்டியலுக்கு பின்னர் சென்னை மாவட்டத்தில் அமையப்பெற்ற **16** சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர்களது எண்ணிக்கை விவரங்கள்

| வ. எண் | எண் மற்றும் சட்டமன்ற தொகுதியின் பெயர் | ஆண்கள் | பெண்கள் | இதரர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | **11.**டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் | 109605 | 115867 | 94 | 225566 |
| 2. | **12.** பெரம்பூர் | 148944 | 151856 | 44 | 300844 |
| 3. | **13.** கொளத்தூர் | 127603 | 131983 | 61 | 259647 |
| 4. | **14.** வில்லிவாக்கம் | 119753 | 123278 | 56 | 243087 |
| 5. | **15.** திரு.வி.க.நகர் (தனி) | 102488 | 108187 | 46 | 210721 |
| 6. | **16.** எழும்பூர் (தனி) | 88005 | 89448 | 35 | 177488 |
| 7. | **17.** இராயபுரம் | 85013 | 88352 | 45 | 173410 |
| 8. | **18.** துறைமுகம் | 86641 | 78921 | 48 | 165610 |
| 9. | **19.** சேப்பாக்கம்– திருவல்லிக்கேணி | 111050 | 115150 | 27 | 226227 |
| 10. | **20.** ஆயிரம் விளக்கு | 114434 | 119297 | 83 | 233814 |
| 11. | **21.**அண்ணா நகர் | 136914 | 140831 | 70 | 277815 |
| 12. | **22.**விருகம்பாக்கம் | 131104 | 130849 | 72 | 262025 |
| 13. | **23.**சைதாப்பேட்டை | 130644 | 134049 | 68 | 264761 |
| 14. | **24.**தியாகராயநகர் | 111992 | 114086 | 38 | 226116 |
| 15. | **25.**மயிலாப்பூர் | 125524 | 132885 | 34 | 258443 |
| 16. | **26.**வேளச்சேரி | 146938 | 149327 | 80 | 296345 |
| மொத்தம் | | **1876652** | **1924366** | **901** | **3801919** |

தற்போது வெளியிடப்பட்டுள்ள இறுதி திருத்தப்பட்டியலில் வாக்காளர்களது எண்ணிக்கை, கடந்த 03.10.2017 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களது எண்ணிக்கையினைவிட 2,71,784 குறைவு என்றும், இந்த எண்ணிக்கை வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களைவிட 6.67 சதவீதம் குறைவு என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இந்த சுருக்கமுறைத் திருத்தத்தில் பெயர்கள் சேர்க்கப்பட்ட வாக்காளர்களில் 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் எண்ணிக்கை 35,194 ஆகும். இதுவரை வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படாத 19 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கான வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை உடனடியாக வழங்கப்படும். 18 மற்றும் 19–வயது பூர்த்தியடைந்த இறுதி திருத்தப் பட்டியலில் பெயர்கள் சேர்க்கப்பட்ட வாக்காளர்களுக்கான வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள், தேசிய வாக்காளர் தினமான 25.01.2018 அன்று சம்பந்தப்பட்ட வாக்குபதிவு மையங்களில் வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.ஆர்.முத்துகுமாரசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**